# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 27.03.2018 | | **2018ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம்நடைபெறும்.**<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 27.03.2018 | 150 | **<u>பொருள் எண். 1</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுங்கவரி வசூல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டமைக்கு கீழ்கண்ட விவரப்படி தொகை வழங்க கோரி பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. Bill No. IRRD/3717/CHE/2013-15/19.2.2015. - 6767.00<br>2.Bill No. IRRD/1353/CHE/2016-17/21.3.2017. - <u>22577.00</u><br>மொத்தம் – 29344.00<br>மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. **29344/–** மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 196 /2012/ அ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 151 | **<u>பொருள் எண். 2</u>**<br>இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு டோக்கன் அச்சிட்டு வழங்கியமைக்கு கீழ்கண்டவாறு தொகை வழங்க திருச்சிராப்பள்ளி கூட்டுறவு அச்சகம் துவாக்குடி என்ற நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. Bill No. 1635/28.12.2015. - 1313.00<br>2.Bill No. 1225/5.2.2016 . - 9828.00<br>3. Bill No. 1225/5.2.2016 . - <u>9896.00</u><br>மொத்தம் – 21037.00<br>மேற்படியான நிறுவனத்திற்கு பில் பட்டியல் தொகை ரூ. **21037/–**மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 316 / 2016/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 27.03.2018 | 152 | <u>**பொருள் எண். 3**</u><br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட விவரப்படியான வாகனங்களுக்கு சாலைவரி செலுத்தக்கோரி போக்குவரத்து துறை அலுவலகத்திலிருந்து பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. TN 45 AY 0474 - 3617.00<br>2. TN 45 BY 4097 - 3618.00<br>3. TN 45 BY 2588 . - <u>10000.00</u><br>மொத்தம் – 17235.00<br>மேற்படியான தொகை ரூ. 17235/– ஐ சாலை வரியாக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 419 / 2018/எச்1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.03.2018 | 153 | <u>**பொருள் எண். 4**</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 6 வரை வியாபார பொருட்கள் விற்பனை செய்யும் தட்டு வண்டி, தள்ளுவண்டி மற்றும் தரை கடைகளுக்கு ( சிட்கோ பகுதி நீங்கலாக) சுங்கவரி வசூல் செய்ய 27.03.2018 –ம் தேதி காலை 11.00 மணியளவில் பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படியான நபர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை ஏலத்தொகையாக கோரியுள்ளனர்.<br>1. பி. சுகுமார், 82ஏ, மேலத்தெரு, துவாக்குடி – ரூ. 90100/–<br>2. டி. முருகன், 3/77, மேலாத்தெரு, துவாக்குடி – ரூ. 51500/–<br>3. ஆர். சிவக்குமார், அய்யம்பட்டி, துவாக்குடி – ரூ. 89000/–<br>4. எம். மனோகரன், 2/228, மேலத்தெரு, துவாக்குடி – ரூ. 90000/–<br>வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு. பி. சுகுமார் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஏற்று வார்டு 1 முதல் 6 வரை (சிட்கோ பகுதி நீங்கலாக) வியாபார பொருட்கள் விற்பனை செய்யும் தட்டு வண்டி, தள்ளுவண்டி மற்றும் தரை கடைகளில் சுங்க வரி 1.4.2018 –ம் தேதி முதல் 31.3.2021 –ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு வசூல் செய்து கொள்ளும் உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** திரு. பி. சுகுமார், 82ஏ, மேலத்தெரு, துவாக்குடி என்பவரின் உயர்ந்தபட்ச கேள்வியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 196/2012/அ2** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 27.03.2018 | 154 | **<u>பொருள் எண். 5</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 6 வரை வியாபார பொருட்கள் ஏற்றி வரும் லாரி, மினி லாரி மற்றும் மினிடோர் வேன் ஆகிய வாகனங்களுக்கு சுங்கவரி வசூல் செய்ய 27.03.2018 –ம் தேதி காலை 11.00 மணியளவில் பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படியான நபர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை ஏலத் தொகையாக கோரியுள்ளனர்.<br>1. பி. சுகுமார், 82ஏ, மேலத்தெரு, துவாக்குடி – ரூ. 58500/–<br>2. கே. சதீஸ், 1/229, கீழத்தெரு, துவாக்குடி – ரூ. 58000/–<br>வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு. பி. சுகுமார் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஏற்று வார்டு 1 முதல் 6 வரை (சிட்கோ பகுதி நீங்கலாக) வியாபார பொருட்கள் ஏற்றி வரும் லாரி, மினி லாரி மற்றும் மினிடோர் வேன் ஆகிய வாகனங்களுக்கு சுங்க வரி 1.4.2018 –ம் தேதி முதல் 31.3.2021 –ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு வசூல் செய்து கொள்ளும் உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** திரு. பி. சுகுமார், 82ஏ, மேலத்தெரு, துவாக்குடி என்பவரின் உயர்ந்தபட்ச கேள்வியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 196/2012/அ2** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 155 | **<u>பொருள் எண். 6</u>**<br>துவாக்குடி நகராட்சியின் 2016–17 ம் ஆண்டு வரவு செலவு மற்றும் நிதி பரிமாற்றங்களை ஆய்வு செய்து தணிக்கை அறிக்கையை உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, திருச்சிராப்பள்ளி அவர்கள் அளித்துள்ளார்கள், அதனை சிட்டி ஜெராக்ஸ், சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி நிறுவனத்தில் பிரிண்ட் செய்து 5 புத்தகங்கள் தயார் செய்து பெறப்பட்டதற்கான உத்தேச செலவினம் ரூ. 5000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 353/2018/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>27.03.2018</td>
<td>156</td>
<td>
<u>பொருள் எண். 7</u><br>
துவாக்குடி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பில் இருந்த 250 வாட்ஸ் மற்றும் 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள், 4’ குழல் தெரு விளக்குகளை எல்ஈடி விளக்குகளாக மாற்றம் செய்த பழுதடைந்தை பழைய தெருவிளக்கு உபகரணங்களை 26.03.2018 –ம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில் இரு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்கண்ட விவரப்படி ஏலத்தொகைகள் அளிக்கப்பட்டுள்ளது மன்றத்தன் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்</th><th>ஏலத்தொகை விவரம்</th><th>மத்திய மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி (12 %)</th><th>மொத்த தொகை</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீ விஜயா எலக்ட்ரிகல்ஸ், அய்யம்பட்டி ரோடு, துவாக்குடிமலை, திருச்சி – 22.</td><td>ரூ. 79646/–</td><td>ரூ. 9558/–</td><td>ரூ. 89204/–</td></tr>
<tr><td>2.</td><td>எம். சாகுல்ஹமீது, 22, ஜீவாதெரு, துவாக்குடிமலை, திருச்சி –22.</td><td>ரூ. 76602/–</td><td>ரூ. 9192/–</td><td>ரூ. 85794/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : –<br>
ஸ்ரீ விஜயா எலக்ட்ரிகல்ஸ், அய்யம்பட்டி ரோடு, துவாக்குடிமலை, திருச்சி – 22. என்பவர் அதிக தொகையான ரூ. 89204/–க்கு ஏலம் கோரியதை அனுமதித்து உத்திரவு வழங்கலாம்.<br>
ந.க.எண். 428/ 2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.03.2018</td>
<td>157</td>
<td>
<u>பொருள் எண். 8</u><br>
தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள்–25.01.2018.ன்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள்மீது சொத்துவரி விதிக்கப்படவேண்டும். மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டுவரும் நிறுவனங்கள், சுயநிதி படிப்புகளை நடத்திவருமாயின், அக்கட்டிடங்கள்மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், துவாக்குடி நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | படிப்புகளை நடத்திவரும்பட்சத்தில், அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின்மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி).க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>மேலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3).ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி அளிக்கலாம்.**<br>**ந.க.எண்.517/2018/அ1.** | |
| 27.03.2018 | 158 | <u>**பொருள் எண். 9**</u><br><br>இந்நகராட்சியில் வார்டு மறு வரையறை செய்வதற்கு வேண்டிய கருத்துரு மற்றும் வரைபடம் அடங்கிய ஆவணங்கள் தயார் செய்து உதவி இயக்குநர், ஊராட்சிகள் மற்றும் மாநில தேர்தல் ஆணையம் ஆகிய அலுவலகங்களுக்கு வழங்குதவற்கு கீழ்கண்ட விவரப்படி இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. மகேஷ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருவெறும்பூர் – ரூ. 17432/–<br>2. துரை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், துவாக்குடிமலை – ரூ. 19150/–<br><br>வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மகேஷ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திருவெறும்பூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1012/2017/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 27.03.2018 | 159 | <u>பொருள் எண். 10</u><br><br>துவாக்குடி நகராட்சியில் உறுப்பினர் / செயலாளர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3174/2017/தே.பொ.1 நாள். 12.09.2017–ன்படி 27.12.2017 –ல் வார்டு மறு வரையறை தொடர்பான செலவினங்களுக்கு இந்நகராட்சி மன்றத்தில் ரூ. 1,50,000/– க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது ஆனால் மேலும் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலாக உத்தேச செலவினம் ரூ. 50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1012/2017/சி1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.03.2018 | 160 | <u>பொருள் எண். 11</u><br><br>துவாக்குடி நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2017–க்கு வாக்காளர் பட்டியல் 5 பிரதிகள் அச்சிட்டு வழங்கியகைக்கு தொகை ரூ. 2076/– மட்டும் வழங்க கோரிய L3 INFO SOLUTIONS PRIVATE LIMITED என்ற நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 2076/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 777/2016/எச்1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.03.2018 | 161 | <u>பொருள் எண். 12</u><br><br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். ந.க.எண். 43141/2007/OP1 நாள். 07.10.2008– ன் படி அனைத்து நகராட்சிகளிலும் அவற்றில் நிலைக்கேற்ப மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் படி பணியிடங்கள் தோற்றுவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வளர்ந்து வரும் இரண்டாம் நிலை நகராட்சியான துவாக்குடி நகராட்சியின் அனைத்து பிரிவு பணிகளையும் திறம்பட செயலாற்றி பொது மக்களின் அடிப்படை வசதி பணிகளை மேம்படுத்தவும், இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல், பன்றி காய்ச்சல், சிக்கன் குனியா மற்றும் மலேரியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு களப்பணிகள் மேற்கொள்ளவும் இந்நகராட்சி பகுதியிலுள்ள பொது மக்களின் நலன் கருதியும் இந்நகராட்சிக்கு கீழ்கண்ட விவரப்படி பணியிடங்கள் தோற்றுவித்துத் தரக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**பொதுப்பிரிவு** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 1. இளநிலை உதவியாளர் – 2<br>2. காசாளர் – 1<br>3. தட்டச்சர் – 2<br>4. ஓட்டுநர் – 1<br>5. இரவு காவலர் – 1<br>**பொறியியல் பிரிவு**<br>1. உதவி நிர்வாக பொறியாளர் – 1<br>2. உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் – 1<br>3. வரைவாளர் – 1<br>4. பணி ஆய்வர் – 1<br>5. குழாய் ஆய்வர் – 2<br>**பொது சுகாதார பிரிவு**<br>1. சுகாதார அலுவலர் – 1<br>2. களப்பணியாளர் – 1<br>3. சுகாதார மேற்பார்வையாளர் – 2<br>4. பொது சுகாதார பியூன் – 1<br>**நகரபைப்பு பிரிவு**<br>1. நகரமைப்பு அலுவலர் – 1<br>2. செயின்மேன் – 1<br>**கணினிப்பிரிவு**<br>1. கணினி உதவி திட்ட அமைப்பாளர் – 1<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 611 /சி1/2015** | |
| 27.03.2018 | 162 | **<u>பொருள் எண். 13</u>**<br>துவாக்குடி நகராட்சி 4–வது வார்டு பகுதியில் மாதாகோவில் தெருவில் உள்ள விளையாட்டு திடலில் நகராட்சியின் பொதுநிதி 2018–19 –ன் கீழ் சீரணி அரங்கம் கட்டுவதற்கு ரூ. 9.90 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 27.03.2018 | 163 | <u>பொருள் எண். 14</u><br>துவாக்குடி நகராட்சி 5–வது வார்டு ராவுத்தாண்மேடு திடலில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் 3–வது வார்டு மேலத்தெருவில் உள்ள பொது கழிப்பிடம் ஆகியவற்றை நகராட்சியின் பொதுநிதி 2018–19 –ன் கீழ் மராமத்து பணி மேற்கொள்ள ரூ. 9.80 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 164 | <u>பொருள் எண். 15</u><br>துவாக்குடி நகராட்சி பொது நிதியின் கீழ் 2018–19 –ன் 8–வது வார்டு வ.உ.சி நகர் பகுதியில் உள்ள நகராட்சி பூங்காவில் நுண் உரம் தயாரிக்கும் மையம் அமைத்தல் பணிக்கு ரூ. 2.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடும் மற்றும் 8–வது வார்டு வ.உ.சி நகர் பகுதியில் உள்ள நகராட்சி பூங்காவில் உள்ள சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு உபகரணங்களை மாற்றி புதிய உபகரணங்கள் அமைத்தல் பணிக்கு ரூ. 5.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 165 | <u>பொருள் எண். 16</u><br>துவாக்குடி நகராட்சி 5–வது வார்டு திருவள்ளுவர் நகர் 5–வது குறுக்கு சாலையில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைப்பதற்கு நகராட்சியின் பொதுநிதி 2018–19 –ன் கீழ் ரூ. 2.50 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 166 | <u>பொருள் எண். 17</u><br>துவாக்குடி நகராட்சியின் 2017–18–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடும் 2018–19 ம் ஆண்டின் திட்ட மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் பார்வையிட்டு பதியலாம்.<br>**ந.க.எண். 748 /2017/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 27.03.2018 | 167 | **<u>பொருள் எண். 18</u>**<br>துவாக்குடி நகராட்சி 8–வது வார்டு வ.உ.சி நகர் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள நகராட்சியின் பொதுநிதி 2018–19 –ன் கீழ் ரூ. 9.80 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 27.03.2018 | 168 | **<u>பொருள் எண். 19</u>**<br>துவாக்குடி நகராட்சி 4–வது வார்டு மாரியம்மன் கோவில் தெருவில் முதல் மற்றும் இரண்டாவது தெருக்களில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சியின் பொதுநிதி 2018–19 –ன் கீழ் ரூ. 8.75 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 385/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________